பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**01 02 2026** **6 45**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வரும் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மக்களவையில் இன்று தாக்கல் செய்கிறார்.

2. தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறுவது கடினமானது அல்ல என்று தமிழக பிஜேபி தேர்தல் பொறுப்பாளர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க, திருத்தம் மேற்கொள்ள 34 லட்சத்து 75 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

4. இலங்கை சிறையில் இருந்து தமிழக மீனவர்கள் 12 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

5. நியூசிலாந்துக்கு எதிரான 5வது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 46 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வரும் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மக்களவையில் இன்று தாக்கல் செய்கிறார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசில் தொடர்ந்து 9வது முறையாக மத்திய பட்ஜெட்டை திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார்.

மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட பிறகு பட்ஜெட் நகல் மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்படும்.

பட்ஜெட் தயாரிப்புக்கு முன்னதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், பொருளாதார நிபுணர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், கல்வி மற்றும் சுகாதாரத்துறையை சேர்ந்தவர்கள், சிறு குறு நடுத்தர தொழில்துறியனர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் விரிவான ஆலோசனை நடத்தினார்.

அதேபோல் வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹானுடன் வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி குறித்து பல்வேறு ஆலோசனை மேற்கொண்டு அதனடிப்படையில் மத்திய பட்ஜெட்டை தயாரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் நிறைவடைந்தவுடன் பட்ஜெட் ஆவணங்கள், யூனியன் பட்ஜெட் என்ற மொபைல் செயலி மற்றும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட உள்ளது.

இதைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து புதுதில்லிக்கு வருகை தந்துள்ள சுமார் 30 கல்லூரி மாணவர்களுடன் நிதியமைச்சர் கலந்துரையாட உள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறுவது கடினமானது அல்ல என்று தமிழக பிஜேபி தேர்தல் பொறுப்பாளர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், மாநிலத்தில் உள்ள திமுக ஆட்சி மீது கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளதால் மக்கள் அந்த ஆட்சி மீது சலிப்படைந்துள்ளதாக கூறியுள்ளார்.

மாநில அரசுக்கு எதிரான அலை வீசுவதாகவும், முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு தமிழர்களுக்கு எதிரான கொள்கைகளை கடைபிடிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

திமுக மற்றும் கூட்டணிக் கட்சிகளுக்கிடையே வெளிப்படையாகவே கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி நிச்சயமாக தேர்தலில் வெற்றி பெறும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பொதுவாழ்வில் தூய்மைக்கு உதாரணமாக விளங்கிய ஓமந்தூர் ராமசாமி அவர்களுக்கு சென்னை ஓமந்தூரார் அரசினர் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், ஓமந்தூரார் காந்திய கொள்கையை பின்பற்றி அருட்திரு வள்ளலார் வழியில் வாழ்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

சமூக நீதியில் தீவிரமான கொள்கை உறுதிகொண்டவர் ஓமந்தூரார் என்பதால்தான் அவரது ஆட்சிக்காலத்தில் 1947ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 14 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது என்று முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

ஆசிரியர்களுக்கு உறுதுணையாக மாநில அரசு செயல்பட்டு வருகிறது என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் கோரிக்கையை ஏற்று ஓய்வூதியத் திட்டத்தை மாநில அரசு மாற்றியமைத்துக் கொடுத்துள்ளதாகவும் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு கடந்த 30ஆம் தேதி வரை முகவரி மாற்றுதல், பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்ள நேரடியாக 24 லட்சத்து 47 ஆயிரத்து 142 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

பெயர்களை நீக்கவும், சேர்க்கவும், திருத்தங்களை மேற்கொள்ளவும் ஆன்லைன் வாயிலாக 10 லட்சத்து 28 ஆயிரத்து 575 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல் இம்மாதம் 17ஆம் தேதி வெளியிடப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

இலங்கை சிறையில் இருந்து தமிழக மீனவர்கள் 12 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

ராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த இவர்கள் கடந்த டிசம்பர் மாதம் 23ஆம் தேதி கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது எல்லைதாண்டி மீன் பிடித்ததாக கூறி அவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

ஒரு மாத சிறை தண்டனைக்குப் பிறகு நேற்று விடுதலை செய்யப்பட்டு இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களுக்கு தூதரக அலுவலகம் அவசரகால பாஸ்போர்ட் வழங்கி விமானம் மூலம் கொழும்பில் இருந்து சென்னைக்கு அனுப்பி வைத்தது.

சென்னை வந்த 12 மீனவர்களையும் மீன்வளத்துறை அதிகாரிகள் வரவேற்று வாகனங்கள் மூலம் சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர்.

<<<<>>>>

தைப்பூச திருவிழாவை முன்னிட்டு முருகப்பெருமானின் கோயில்களில் இன்று காலை முதல் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

இதன் காரணமாக திருச்செந்தூர், பழனி, திருத்தணி, சுவாமிமலை உள்ளிட்ட அறுபடை வீடுகளில் ஏராளமான பக்தர்கள் குவிந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி ஆலயத்திற்கு ஏராளமானோர் காவடி எடுத்து பாதயாத்திரையாக வருகை தந்துள்ளனர்.

இதனால் பழனி நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Rajasekaran - 50 Sec)**

தைப்பூசத்தை முன்னிட்டு நாமக்கல் மாவட்டம் பாச்சல் கிராமத்தில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக தொடரும் பாரம்பரிய முறைப்படி காவடி எடுத்துச் செல்லும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதையொட்டி காலிப்பட்டி அருள்மிகு கந்தசுவாமி திருக்கோவிலில் நாமக்கல், சேலம், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் குவிந்துள்ளனர்.

தைப்பூச திருவிழாவை முன்னிட்டு வடலூர் வள்ளலார் சத்திய ஞானசபையில் இன்று காலை 6 மணிக்கு நடைபெற்ற ஜோதி தரிசன நிகழ்ச்சியில் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

தைப்பூச திருவிழாவை ஒட்டி ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்துள்ளதால் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்க அரசின் குடியேற்றக் கொள்கைகளை எதிர்த்து நடைபெற்று வரும் போராட்டங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மாகாண அரசுகளுக்கு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

-------------

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நேற்று பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் 92 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

-------------

குடியரசுத்தலைவர் மாளிகையில் உள்ள அம்ரித் தோட்டம், பொதுமக்கள் பார்வையிட வசதியாக நாளை மறுநாள் திறக்கப்பட உள்ளது.

-------------

ஈரோடு மாவட்டத்தில் ஆண்டுதோறும் 5 நாட்கள் நடைபெறும் நிலாப் பிள்ளையார் வழிபாடு, நேற்று ஈரோடு கைக்காட்டிவலசு பகுதியில் தொடங்கியது.

-------------

தருமபுரி மாவட்ட காவல்துறை சார்பில் தலைக்கவசம் அணிவதன் விழிப்புணர்வை வலியுறுத்தி நேற்று நடைபெற்ற பேரணியில் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

-------------

நீலகிரி மாவட்டம் குன்னூரில் நாய் கடித்து ஒரே நாளில் 3 பேர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

-------------

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்ச சென்ற விவசாய மின்சாரம் தாக்கி உயிரிந்தார்.

-------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குடியிருப்பு பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் கண்காணிப்பு கேமராக்களைப் பொருத்த வேண்டும் என்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. தங்கதுரை கேட்டுக்கொண்டுள்ளார்.

-------------

ராணிப்பேட்டை மாவட்டம் கலவை அருகே உள்ள ஆரூர் கிராமத்தில் கிணற்றில் குளிக்கச் சென்ற 3 சிறுமிகள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

-------------

சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில் தமிழகத்தின் பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் நேற்று நடைபெற்றன.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

நியூசிலாந்துக்கு எதிரான 5வது மற்றும் இறுதி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 46 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 5 விக்கெட் இழப்பிற்கு 271 ரன் எடுத்தது.

இஷான் கிஷன் 43 பந்துகளில் 103 ரன்னும், சூர்யாகுமார் யாதவ் 30 பந்துகளில் 63 ரன்னும் எடுத்தனர்.

272 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய நியூசிலாந்து அணி, 19 புள்ளி 4 ஓவரில் 225 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அர்ஷ்தீப் சிங் அபாரமாக பந்துவீசி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அக்ஷர் படேல் 3 விக்கெட்டுகளையும், வருண் சக்கரவர்த்தி, ரிங்கு சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

---------------

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

Bulawayo-வில் நடைபெற உள்ள இப்போட்டி இந்திய நேரப்படி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**